**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.332/2022**

**வா.சா. –1–கோவிந்தராஜ்**

**நாள். 21.02.2024**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 2ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் நான் பில்டிங் காண்ட்ராக்டர் வேலை பார்க்கிறேன், பெட்ரோல் பங்க் வைத்துள்ளேன், விவசாயம் பார்க்கிறேன். நான் பெட்ரோல் பங்க் வைத்துள்ளதற்கு ஆதராம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். விவசாய நிலங்கள் உள்ளதற்கும், பில்டிங் காண்ட்ராக்டர் வேலை செய்வதற்கும் ஆதாரம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும், நான் சொந்த வீட்டில் தான் குடியிருந்து வருகிறேன். நான் மேற் சொன்ன தொழில் எதுவும் செய்யவில்லை எனவும், வாடகை வீட்டில் தான் குடியிருந்து வருகிறேன் என்றும் சொல்வது சரியல்ல. திண்டுக்கல் தாலுகா சீலப்பாடி கிராமம், விஜய நகர் சர்வே எண் – 327/2 க்கு கட்டுப்பட்ட 27 ஆம் எண் மனை என் மனைவிக்கு பத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி மனை எனது மனைவிக்கு பாத்தியப்பட்டது என்றும் அதில் வடபுரம் 1330 சதுரடி இடத்தை எனது மனைவி பிரதிவாதியின் மனைவி காயத்திரிக்கு ரூ.23 லட்சத்திற்கு கிரையம் பேசினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனையை கிரையம் பேசி எனது மனைவியிடம் பிரதிவாதியின் மனைவி அன்றைய தினமே ரூ.3 லட்சம் அட்வான்ஸ் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் மனைவிதான் மோகன்ராஜிடம் ரூ.3 லட்சம் பணம் கொடுத்து அந்த சொத்தை மீட்டார்கள் என்றால் சரியல்ல. எனது மனைவி ஜீவமணியும் நானும் சேர்ந்து தான் இருக்கிறோமா என்றால் நாங்கள் ஒரே வீட்டில் தனி தனி போர்சனில் குடியிருக்கிறோம். எல்லா விசயங்களையும் நானும் எனது மனைவியும் பகிர்ந்து கொள்வோமா என்றால் இல்லை. நானும் எனது மனைவியும் சேர்ந்து தான் ஒரே வீட்டில் வாழ்கிறோம் என்றும் தனி தனி போர்சனில் குடியிருப்பதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவி ஜீவமணி பிரதிவாதியின் மனைவி காயத்திரிக்கு 19.09.2020 அன்று அவரது சொத்தை அவரது பவர் ஏஜெண்ட் கோகுல் கிருஷ்ணன் மூலமாக கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த கிரையத்திற்காக தொகை முழுவதையும் எனது மனைவியிடம் நேரடியாகவும் என் மூலமாகவும் பிரதிவாதியின் மனைவி செலுத்திவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரையம் பேசிய

சமயம் பிரதிவாதியும் அவரது மனைவியும் பூர்த்தி செய்யப்படாத 2 காசோலைகள் மற்றும் 2 புரோநோட்டுகளில் கையொப்பம் செய்து கொடுத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. அதன் பின் வங்கி கடன் வாங்கி கிரைய தொகை முழுவதையும் எங்களிடம் கொடுத்துவிட்டு பூர்த்தி செய்யப்படாத காசோலை மற்றும் புரோநோட்டுகளை திரும்ப கேட்ட போது திருப்பி தருவதாக சொன்னோம் என்றால் சரியல்ல. அந்த பூர்த்தி செய்யப்படாத காசோலையை வைத்து தான் தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், அந்த கடனுக்காக காசோலை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறார் என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், அவரை மிரட்டி பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனவே, இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை – ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.02.21 19:20:47 +0530

Additional District Judge,

Dindigul.